
ரூ. 5.00

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

தமிழ் ஆண்டு 2039
வைகாசி - மே 2008



கரந்தைத் தமிழ்ச்சங்கம்
11-5-2008 இல் நடத்திய
பன்னிரு திருமுறைப்பாதுகாப்பு மாநாட்டில்
ஆறுமுகசாமி சிவனடியாரைப் பாராட்டுதல்

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

விளம்பரக் கட்டணம்

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின் அட்டை			
வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	1/2 பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ.	5-00
ஆண்டுச் சந்தா	ரூ.	60-00
ஆயுட் சந்தா	ரூ.	600-00
புரவலர் கட்டணம்	ரூ.	1000-00

சந்தா - விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி,

மக்கள் சிந்தனை

குன்றக்குடி - 630 206

தொலைபேசி எண். 04577 - 264227

ஆதீன இணையதள முகவரி :

website : www.kundrakudiadheenam.org.

ஆசிரியர்

மரு. பரமகுரு

அச்சிட்டு வெளியிடுவோர் :

சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி.

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

தமிழாண்டு 2039	மாதம் : வைகாசி
மலர் : 23	இதழ் : 5

தொடரும் நல்லிணக்கப் பயணம்

தமிழகமே சில தினங்களாக உற்று நோக்கிக் கொண்டிருந்த - தமிழக சட்டமன்றத்தின் கவனத்தை ஈர்த்த மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், உத்தபுரம் கிராமத்தின் பிரச்சனையை அறிந்த நாள் தொட்டு மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் பாராட்டுதலுக்குரிய டாக்டர் ஜவகர் அவர்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பிரச்சனையைப் பற்றி அடிக்கடி கேட்டுத் தெரிந்துகொண்டு, நாம் அமைதிப் பேச்சுவார்த்தைப் பணியாற்ற எப்பொழுது அழைத்தாலும் வரத்தயார் என்று தெரிவித்திருந்தோம்! ஆட்சித்தலைவர் அவர்கள் வாய்ப்பான சரியான நேரத்தில் நமது பணிகளைப் பயன்படுத்திக் கொள்கின்றோம் என்று தெரிவித்திருந்தார்கள். அதே நேரத்தில் இந்தியப் பொது உடைமை இயக்கத் தமிழ் மாநிலப்பிரிவுத் தலைவர் தோழர் தா. பாண்டியன் அப்பணிக்கு நமக்கு அழைப்பு விடுத்திருந்தார். நல்லிணக்கப் பணியாக மே மாதம் 15-ஆம் தேதி காலை உத்தபுரம் கிராமத்திற்குப் புறப்பட்டோம்.

நம்மோடு தோழர் தா. பாண்டியன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை மற்றும் தோழர்கள் மதுரை மறைமாவட்டப் பேராயர் இல்ல முதன்மைக்குரு மறைத்திரு ஜோசப் செல்வராஜ் அவர்கள், திருவருட் பேரவை மாநிலச் செயலர் டாக்டர் அமானுல்லா, திருவருட் பேரவை உறுப்பினர் திரு. சோமு மற்றும் திருவருட்பேரவை அன்பர்களோடு பயணம் ஆனோம்!

1989-இல் உத்தபுரம் சாதிக் கலவரம் நடைபெற்றபொழுது நமது பரிபூரணமடைந்த மகாசந்நிதானம் அருள்நெறித் தந்தை அவர்கள் அமைதிப் பணியாற்றினார்கள்!

அந்த மண்ணில்தான் இன்று இரு தரப்பினர்களையும் ஒரு சுவர் பிரிப்பதாய்ப் பிரச்சனை!

கண்ணுக்குத் தெரியும் சுவருக்கு பின்னே கண்ணுக்குத் தெரியாத பல பிரச்சனைகள்! இரண்டு தரப்பு மக்களையும் சந்தித்துப் பேசினோம்! மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் இயக்கமும் மற்ற அரசியல் இயக்கங்களும் மாண்புமிகு தமிழக முதல்வரின் கவனத்திற்கு பிரச்சனையைக் கொண்டு சென்று உடனடித் தீர்வு கண்டன!

சமத்துவ சமுதாயம் மலர வேண்டும், வேறுபாடுகளைக் கடந்து சகோதர நல்லிணக்கம் மலரவேண்டும் என்பதில் தணியாத இலட்சிய நோக்குடையவர் முத்தமிழறிஞர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர். அவர்கள் உடனடித் தீர்வு கண்டார்கள்! தடுப்புச்சுவர் தகர்ந்து சமத்துவப் பாதை அமைக்கப்பட்டது.

சர்வமதத் தலைவர்களும், தா. பாண்டியன் உள்ளிட்ட தோழர்களும் இரு தரப்பு மக்களிடமும் கலந்து உரையாடினோம்.

முதலில் மனித உரிமை மறுக்கப்பட்ட (ஆதிதிராவிட) சகோதரர்களையும் தாய்மார்களையும் சந்தித்துக் கலந்து உரையாடினோம்.

இரு சமூகங்களையும் பிரித்திட்ட குறுக்குச்சுவரைப் பார்வையிட்டோம். ஆதிதிராவிட சகோதரர்கள் தங்கள் குறைகளைக் கோரிக்கையாகக் கூறினார்கள். அச்சம் அகலவேண்டும், சமாதானமும் மலரவேண்டும்! வேறுபாடுகளை களைந்த சமத்துவ மாற்றத்தினை அறவழியில் காண முடியும் என்றும், வேறுபாடுகளைக் களைந்த சமத்துவ நல்லிணக்க வாழ்க்கைக்கு தயார் ஆவோம் என்றும் எடுத்துரைத்தோம்.

பிள்ளைமார் சமுதாய மக்களையும் சந்தித்தோம். அவர்களின் பிரதிநிதியாகத் தணிக்கையாளர் முருகேசன் நம்மை சந்தித்துப் பேசினார். அவர்களும் தங்கள் கோரிக்கைகளையும் குறைகளையும் நம்மிடம் எடுத்துரைத்தார்கள்.

1989-இல் நடைபெற்ற கலவரத்திற்கு பிறகு இரு தரப்பு மக்களும் பலமுறை அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தி அதன் முடிவாய் இருதரப்பினரின் ஒப்புதலோடு கூடிய சமரச உடன்படிக்கைக்குப் பிறகு

சுவர் எழுப்பப்பட்டது என்றார்கள். இங்கு எங்களிடம் வேற்றுமை உணர்வு இல்லை! அவர்களும் விற்பனை செய்கின்ற காய்கறிகளை, உணவுப் பொருட்களை நாங்கள் வாங்குகின்றோம்! எங்களிடம் உள்ள கடைகளில் அவர்கள் பொருட்கள் வாங்கி கொள்கின்றார்கள் என்று, தணிக்கையாளர் முருகேசன் தெரிவித்தார்.

திருப்பூர் போன்ற நகரங்களில் பணியாற்றும் தங்களைப் போன்றவர்கள், வேற்றுமைக்கு இடம் தராத சமத்துவ கிராமத்தை உருவாக்கப் பாடுபடவேண்டும் என்று எடுத்துரைத்தோம்.

இரண்டு தரப்பு மக்களிடமும் சமத்துவ சகோதரத்துவ நல்லிணக்கத்தின் அவசியத்தை எடுத்துவைத்து உத்தபுரத்தை யுத்தபுரமாக ஆக்காமல் உத்தமபுரமாக ஆக்கப் பாடுபடவேண்டும் என்று வலியுறுத்தினோம்!

இரண்டு தரப்பினரின் கோரிக்கைகளையும் முதல்வரின் கனிவான கவனத்திற்கு அனுப்பி வைத்துள்ளோம். மக்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் தீர்க்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இதை விரைவில் நிறைவேற்றுவார்கள் என்பதில் இருகருத்துக்கு இடம் இல்லை.

கண்ணுக்குத் தெரியும் சுவர் மட்டும் இவர்களைப் பிரிக்கவில்லை.

கண்களுக்குத் தெரியாத அச்சம், அவநம்பிக்கை, பாதுகாப்பின்மை இவைகளும் இவர்களிடையே இழையோடி கொண்டிருப்பதை உணர முடிகின்றது. "வீட்டுக்கும் வீட்டுக்கும் இடையே உள்ள சுவரினை இடிப்போம்" என்றான் பாரதிதாசன்.

மனித மனங்களில் மறைந்திருக்கின்ற சுவரினை அப்புறப்படுத்துவோம்.

காவல்துறையும், சட்டங்களும் உருவாக்கும் அமைதியைவிட மனித மனங்களை அன்பின் வழியே இணைப்பதன் மூலம் உருவாக்கும் அமைதியே நிலையானது! மகிழ்ச்சியானது! நிரந்தரமானது!

அந்த அன்பு அமைதியை உருவாக்க, சமத்துவ சகோதரத்துவத்தை உருவாக்க அனைவரும் இணைந்து பாடுபடுவோம்.

பொன்னம்பல அடிகளார்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருக்குறள் உரை

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

87. பகை மாட்சி

தனது அறியாமை, செயல்திறன் இன்மை முதலியவற்றால் பகைவரைப் பெருமைக்குரியவராக்கல்.

பகைவனை அலட்சியப்படுத்தாது, பகைவனுடைய தகுதிப்பாடுகளை மதித்தல்.

"நல்லதோர் பகை" என்ற கம்பன் வாக்குணர்க.

வலியார்க்கு மாறுஏற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை. (861)

தம்மினும் வலிமையுடையோரிடம் மாறுபாடு கொண்டு எதிர்த்தலைத் தவிர்த்திடுக; தம்மின் மெலியார்க்குப் பகைவராதலை விரும்புக.

"தம்மின் மெலியார் மேல் பகை மேவுக" - "அறநெறி"வழி ஏற்புடையதன்று. பகையைப் பராமரித்துக் கொள்க என்று கூறலாமா?

அன்பிலன் ஆன்ற துணைஇலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு. (862)

யார்மாட்டும் அன்பிலான், அதுவேயுமன்றி ஆழ்ந்த துணையுமில்லாதவன், தன் வாழ்க்கையில் குன்றுதல் ஆவான். இத்தகையோன் தன் மீது வந்த பகையாளியின் வலியை எப்படித் தொலைப்பான்?

அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் தமக்கு. (863)

அஞ்சத்தக்கன அறிந்து அஞ்சாதவன். அறிய வேண்டுவனவற்றை அறியாதவன், அமைதி காக்கவும் மாட்டாதவன், ஈகையும் இல்லாதவன். இத்தகையோன் பகைவனுக்கு மிகவும் எளியனாகிவிடுவான்.

நீங்கான் வெகுளி நிறைஇலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது. (864)

கோபம் நீங்கப் பெறாதவனும் நிறையில்லாதவனுமாகிய ஒருவன் எந்நாளும் எங்கேயும் எவருக்கும் எளியவனாவான்.

இங்கு "எளிமை" பண்பாட்டு எளிமையன்று; இழிவின் பாற்பட்ட எளிமை.

வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க்கு இனிது. (865)

நீதிநூலை ஓதி, அந்நீதி நூல் ஓதும் வழியை நோக்கமாட்டான். வாய்த்த தொழிலைச் செய்யான்; வரக்கூடிய பழியை நோக்கான். பண்பு இல்லாதான் – இத்தகையோன் பகைவருக்கு இனியன்.

நிறைநலம் இல்லாதானைப் பகைவன் எளிதில் வெற்றி கொள்ள இயலும் என்பதால் இனிது என்றார்.

காணாச் சினத்தான் கழிபெரும் காமத்தான்
பேணாமை பேணப் படும். (866)

தன்னையும் பிறரையும் காண இயலாத கோபத்தையுடையவன், மிகுந்த காம உணர்ச்சியுடையோன் இவன்றன் உறவு பேணாத நிலை மேற்கொள்ளப்பெறும்.

வெகுளியின் உச்ச எல்லையில் ஒன்றும் அறியா நிலை ஏற்படுமாதலால் "காணாச் சினத்தன்" என்றார்.

"கழிபெருங் காமத்தான்" – மிகுந்த பெண் போகி என்றும் கூறுவர். ஆயினும் மிகுந்த பெண் போகம் தரும் துன்பத்தைவிடப் பணக்காரனாகும் ஆசை, புகழ்வேட்டை, ஆதிக்க அதிகார வேட்கை முதலியனவும் கொடிய துன்பங்களை விளைவிக்கின்றமையை ஓர்க.

துறவிலும் கூட மண்ணை, பொன்னைத் துறவாது பெண்ணை மட்டும் துறப்பது ஏன்? இம்மூன்றில் எது சமூகத்திற்குப் பெருந்தீங்கு செய்யக்கூடியது?

கொடுத்தும் கொளல் வேண்டும் மன்ற அடுத்துஇருந்து
மாணாத செய்வான் பகை. (867)

தன்னை அடுத்திருந்து தனக்குப் பொருந்தாதன செய்வானின் பகையை, ஒன்றைக் கொடுத்தாயினும் கொள்க.

இழப்பது ஒன்று. அறிவு பூர்வமானது. ஆனால், அடுத்திருந்து செய்வார் தீமை வழி இழப்பு கணக்கிலவாகும்.

உடனிருப்பார் போல் காட்டிச் சோதனைக் காலத்தில் உடன் வராமல் ஒதுங்கி நிற்பார் உறவு பயனற்றது. தீமையில் எல்லாம் தீமை வலுவிழக்கச் செய்தல் என்பதறிக.

குணன்இலனாய்க் குற்றம் பலஆயின் மாற்றார்க்கு
இனன்இலன்ஆம் ஏமாப்பு உடைத்து. (868)

ஒருவன் நற்குணங்கள் இல்லாதவனாகவும் குற்றங்கள் பலவுடையவனாகவும் இருப்பின் இவனின் இந்த நிலைமை மாற்றானுக்குத் துணையாக அமையும்.

நற்குணம் உடையராயின் ஆன்ம வலிவும் சுற்றத்தின் வலிமையும் இருக்கும்.

செறுவார்க்குச் சேண்இகவா இன்பம் அறிவுஇலா
அஞ்சும் பகைவர்ப் பெறின். (869)

அறிவிலாது அஞ்சும் பகைவரைப் பெறின் பொருது வெல்வாருக்கு உயர்ந்த இன்பங்கள் கிடைக்கும்.

அறிவிலாது அஞ்சுபவனிடம் பொருது வெற்றி பெறுதல் அறமாகுமா?

கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லாது ஒளி (870)

நீதி நூல்களைக் கல்லாதவனையும், வெகுளி உடையவனையும் சிறு பொருள்களை விரும்புபவனையும் என்றும் புகழ் மேவாது.

ஒருவனைப் பகைத்தலால் வரும் சிறு பொருளை விரும்புவானைப் புகழ் மேவாது.

(தொடரும்)

ஈரோடு மு. அழகப்பன் திருவடிப்பேறு

அருள்நெறித் திருக்கூட்டச் சிறப்பு உறுப்பினர்களில் ஒருவரும் நமது குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீன மெய்யன்பர்களில் ஒருவருமாகிய ஈரோடு திருப்பணிச் செம்மல் சிவத்திரு மு. அழகப்பன் அவர்கள் 7.5. 2008 அன்று சிவபதம் அடைந்தார். அப்பெருமகனாரை இழந்த அவர்தம் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் "மக்கள் சிந்தனை" ஆழ்ந்த இரங்கலைப் புலப்படுத்திக் கொள்கிறது. அவர் தம் நல்லுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்ப அமைதி பெற இறைஞ்சுகிறது.

- ஆசிரியர் -

தில்லைவாழ் அந்தணரும் தீட்சிதரும்

(சித்தாந்தம் ஆசிரியர் மு. அருணாசலம் எம்.ஏ.,
துணை ஆசிரியர் மு. இரகுபாய் எம்.ஏ.,பி.எஸ்ஸி.,பி.டி.)

தில்லை அம்பலம் என்பது சிதம்பரம். இது ஞானாகாசமாகிய தலம். பஞ்சபூதத் தலங்களுள் இது ஆகாசத் தலம். அம்பலம் என்பது பொது இடம். சபை என்பதும் அதுவே. தில்லையில் நடராஜப்பெருமான் ஆனந்தத்தாண்டவம் செய்கின்ற இடம் சிற்சபை என்றும் எதிரில் பொதுமக்கள் நின்று தரிசிக்கும் இடம் கனகசபை என்றும் வழக்குண்டு. இவை முறையே சிற்றம்பலம் என்றும், பொன்னம்பலம் என்றும் தமிழில் சொல்லப்படும். இங்கு இந்த ஆலய அமைப்பு ஏற்பட்ட நாளாகச் சைவ நன்மக்கள் பொன்னம்பலத்தில் நின்று கொண்டு நடராஜ தாண்டவத்தைத் தரிசித்தார்கள். பொன்னம்பலம், சிற்றம்பலம் இரண்டையும் சூழ்ந்து வருவது ஒரு பிராகாரம். பொன்னம்பலத்தில் இடம் காணாத போது அந்தப் பிராகாரத்தில் நின்று தரிசித்தார்கள். தரிசித்தவர்கள் ஆடினார்கள், பாடினார்கள் - தரிசன ஆனந்த மிகுதியால் - ஆனந்தம் மிகுந்தால் கரணங்களைக் கட்டுப்படுத்த முடியாது. வாய் பேசுகின்ற கரணம், உடல் முழுவதும் ஆடுகின்ற கரணம். இவை இரண்டும் ஆனந்த மிகுதியால் கட்டுக்கடங்காமல் தொழில்படுகின்றன. முந்தையோர் என்ன பாடி இருப்பார்கள்? பிற்காலத்தில், வந்த பிரபந்தப் பாடல்கள் அக்காலம் தோன்றவில்லை. அவர்கள் பாடியது திருமுறைப் பாடல்கள் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா முதலியன. இவற்றைப் பிராகாரத்தில் இருந்தும் பாடினார்கள். சபையில் இருந்தும் பாடினார்கள். (இது, அதாவது இப்படி இசைவல்லவர்கள் சிவனடியார்கள் பாடிய நிகழ்ச்சி) அநாதி காலம்தொட்டு என்று சொல்லாவிட்டாலும் தேவாரம் தோன்றிய காலம் முதல் அத்தேவாரங்கள் நம்பியாண்டார் நம்பி இறை அருளால் இராஜ ராஜசோழ மன்னனுக்காக எடுத்துக் கொடுத்த காலம் முதல், பொன்னம்பலத்தில் பாடப்பட்டு வந்தன. இராஜராஜ சோழன் பாடினான்; ஆடினான். நடராஜருடைய சிற்சபைக்கு அருகிலே இருந்து பதிகங்களை

எடுத்த காலத்து அரசன் பொன்னம்பலத்தில் நின்று நம்பி கொடுக்க வாங்குகிறான். வானத்திலிருந்து "வேண்டுவன மட்டும் வைத்தோம்" என்ற ஓர் ஓசை எழுந்தது. அந்த மொழி கேட்டலும் மன்னன் தானும் ஆடினான். பாடினான் என்று புராணம் சொல்லுகிறது. எங்கு ஆடினான்? பாடினான்? பொன்னம்பலத்தில் பாடினான், ஆடினான். அங்கு அல்லாமல் பிராகாரத்தில் அல்ல. பாடியது தமிழ்.

இதற்குச் சில ஆண்டுகள் பின்னால் திருக்கடவூர் ஆட்டுவாணிகக் குலத்தில் வந்த உய்யவந்த தேவநாயனார் தாம் செய்த திருக்களிற்றுப்படியார் என்ற சித்தாந்த சாத்திர நூலைத் தில்லையம்பலப் பஞ்சாக்கரப்படியின் கீழ் வைத்தார். படியில் கல்லில் செதுக்கப்பட்டிருந்த களிறு அந்த நூலை எடுத்துத் தில்லைத் திருக்கூத்தன் திருவடியில் வைத்தது. இது காரணமாக அந்த நூலுக்கே திருக்களிற்றுப்படியார் என்று பெயர் வந்தது.

இவ்வளவு பெருமைகளும் தமிழ்ப் பாடல்களுக்குத் தான் பொன்னம்பலத்தில் செய்யப்பட்டிருந்தன. எந்த வடமொழிக்கும் இவ்வாறு செய்ததாக இல்லை. ஆகவே, தேவார மூவரும் பாடிய தமிழ்ப் பாசுரங்களும் அழகிய திருச்சிற்றம்பலம் உடையான் தமது திருக்கையால் எழுதிய தமிழ்த் திருவாசகமும் அந்தப் பொன்னம்பலத்தில் பாடக்கூடாது என்று தீட்சிதர் என்பவர்கள் தடுக்கிறார்கள் என்பது சைவர்களுக்குப் பெரும் வெட்கக்கேடு. இதுபற்றிய குறிப்புகளை டிசம்பர் மாத சித்தாந்தம் இதழில் காணலாம்.

இந்த இடத்தில் ஒரு நிலைமையைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். சைவமக்கள் முன்னெல்லாம் பாசுரங்களைப் பொன்னம்பலத்தில் பாடிவந்தது போலவே இன்றும் இனியும் என்றும் தொடர்ந்து பாடி வரவேண்டும். இதற்கு அனுமதி என்பது முழுப் பிழை. இது சைவராய்ப் பிறந்தோர் அனைவருக்கும் பிறப்புரிமை. இவ்வுரிமையை எவரேனும் மறுத்தால் அல்லது தடை செய்தால், சைவர் இக்கோயிலுக்குப் போவதை நிறுத்த வேண்டும்.

இது சரியா? இது நடக்குமா? இல்லையேல் தடைசெய்வோரைக் கோயிலைவிட்டு அப்புறப்படுத்த வேண்டும். தீட்சிதர் என்று

சொல்வோருக்குக் கோயில் சொந்தச் சொத்தல்ல. அவர்கள் கோயில் பூசை செய்யும் உரிமை கொடுக்கப் பெற்றவர்கள். அவர்கள் சைவர் பாடும் உரிமையைப் பறித்தால் அவர்களுடைய பூசை உரிமையைப் பறிக்க வேண்டியது தான் வழி; வேறில்லை. இதற்குத் தீட்சதர் தயாரா? அவர்களுக்குப் பூசிக்கும் உரிமை ஏது, யார் கொடுத்தார்? இதை நாம் ஆராய வேண்டுமல்லவா?

இதுபற்றிச் சைவர் நியாயமான சாத்துவீக முறையில் இந்தத் தீட்சிதர்களுக்கு வேண்டுகோள் விடுத்தும், அரசாங்கத்துக்கு மனுச் செய்தும் தங்கள் உரிமையைப் பறிக்கின்ற தீட்சிதர் செயலை மாற்ற முயல்வது ஓர் அடக்கமான செயல். இதில் மற்றோர் உண்மை சிந்திக்கத் தக்கது.

திப்புசுல்தான் கலகத்தின்போது சிதம்பரம் கோயிலைக் கைப்பற்றி அதைத் தனது பாசறையாக உபயோகித்துக் கொண்டான். அப்போது அங்கிருந்த தில்லைவாழ் அந்தணர்களிற் பலர் போராடி இறந்துவிட எஞ்சியவர்கள் தில்லையைவிட்டு எங்கோ ஓடிவிட்டார்கள் என்று தெரிகிறது. பல ஆண்டுகள் இந்த நிலை நீடித்தது. 40 ஆண்டுகள் நடராஜருக்குப் பூஜை இல்லை. பின்னால் பிரிட்டிஷார் வசம் இந்த நாடு வந்தபோது அவர்கள் எல்லாப் பெரியகோயில்களும் பகைவருடைய பாசறையாக ஒருகால் இனியும் பயன்பட்டுவிடுமோ என்ற அச்சத்தால் தாங்களே கோயில் நிர்வாகத்தை மேற்கொண்டு நடத்திவந்தார்கள். இது நடத்தியது இங்கிலாந்தில் உள்ள கிழக்கிந்திய வர்த்தகக் கம்பெனியார். பின்னர் கம்பெனி நிர்வாகம் இங்கிலாந்தின் அரசிடம் ஒப்புவிக்கப்பட்டது. ஆண்டு 1857. அரசுக்குத் தலைமை ஏற்றிருந்த விக்டோரியா மகாராணியினுடைய ஒரு பெரும் பிரகடனத்தின் மூலம் இந்திய இந்து மக்களுடைய சமய நெறியில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் குறுக்கீடு எதுவும் இருக்காது என்று சொல்லப்பட்டது. இதைச் செயல்படுத்தும் முறையில் எங்கெங்கு அவர்கள் கோயிலைத் தங்கள் வசம் நிர்வாகத்தை வைத்திருந்தார்களோ, அங்கெல்லாம் ஊர் மக்களை அழைத்து, "நீங்கள் இக்கோயில் நிர்வாகத்தை மேற்கொள்ளுங்கள்" என்று ஒப்புவித்துவிட்டார்கள். இவ்வாறு ஒப்புவித்த போதுதான் பலருக்குக் கோயில்களின் பரம்பரைப் பாத்தியதை உதயமாயிற்று. யார் முன் வந்தார்களோ அவர்கள் கோயிலைப் பெற்றுக் கொண்டார்கள். காஞ்சி

காமாட்சி கோயில் இந்த முறையில்தான் சங்கராசாரியர் நிர்வாகத்துக்கு வந்தது.,

சிதம்பரத்தின் நிலையும் இதுவே. திப்புவின் காலத்தில் சிதம்பரத்தை விட்டு ஓடிய தில்லைவாழ் அந்தணர்கள் என்ன ஆனார்களோ தெரியாது. திப்புசுல்தானை ஆங்கிலேயர் 1799 இல் மைசூர் நாட்டிலுள்ள ஸ்ரீரங்க கட்டணத்தில் தோற்கடித்துக் கொன்றார்கள்.1799 முதல் 1857 வரையில் தில்லைக் கோயிலில் பிரிட்டிஷார் நிர்வாகம். 1799க்கு முன்னும் பின்னுமாக நாற்பது ஆண்டுகள் கோயிலில் பூசை இல்லை என்று குறிப்பிட்டோம். 1857இல் பிரிட்டிஷார் பொதுமக்களை அழைத்துப் பிறகோயில்களில் செய்ததுபோலத் தில்லைக் கோயில் நிர்வாகத்தை மேற்கொள்ளும்படி கேட்டபோது, பண்டைய பூசைக்காரரான தில்லைவாழ் அந்தணர் யாருமே இல்லை. போனவர்கள் என்ன ஆனார்கள் என்றும் தெரியாது. சைவர்கள் ஓடிப்போன தில்லைவாழ் அந்தணர் திரும்பி வருவார்களா என்று ஆவலுடன் எதிர்பார்த்து ஏமாந்தார்கள். முயற்சியும் அறிவும் மிக்கவர்களாய்த் தில்லையில் வாழ்ந்த சில பிராமணர்கள் இதுதான் தருணம் என்று பிரிட்டிஷாரிடம் சென்று, "நாங்கள் கோயிலை நிர்வகிக்கிறோம்" என்று சொல்லிக் கோயில் ஆட்சியைப் பெற்றுக்கொண்டார்கள். பிரிட்டிஷாரும் பிராமணர் உயர்வு என்று நினைத்தபடியால் சந்தோஷமாய்க் கொடுத்துவிட்டார்கள். இந்தப் பிராமணர் தீட்சிதர் என்று பெயர் வைத்துக் கொண்டார்கள். இவர்கள், திப்புவின் ஆட்சிவரையில் நடராஜர் கோயிலை நிர்வாகம் செய்துவந்த தில்லைவாழ் அந்தணர் அல்லர். ஆயினும் இவர்களிடம் தான் பிரிட்டிஷ் அரசாங்கம் கோயிலை ஒப்புவித்தது. அப்போதிருந்த சைவ மக்களும் இந்த நிலையை ஒப்புக்கொண்டார்கள். நாம் இந்த நிலையில் "இந்த தீட்சிதர் தில்லைவாழ் அந்தணர் இல்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்" தில்லைவாழ் அந்தணர் தேவார காலத்திலிருந்து தமிழை நன்றாக உணர்ந்து போற்றியவர்கள் ஆனால் இத்தீட்சிதர்களோ தமிழ் அறியாதவர்கள். வடமொழியே உயர்வு தமிழ் தாழ்வு எண்ணுகின்றவர்கள். ஆகவே இன்றைய நிலையில் சைவ மக்கள் விழித்துக் கொள்ள வேண்டும். தீட்சிதர் என்ற பெயர் (தீக்கிதர் என்ற வடிவத்தில் கூட) திருமுறையில் வழங்கவில்லை. உமாபதியார் வரலாற்றில் கூட வழங்கவில்லை. அவர்கள் சிவாசாரியார் எனப்பட்டனர்.

இன்றைய தீட்சிதர்களே அவரை உமாபதி சிவாச்சாரியார் என்று எழுதியிருக்கிறார்கள். முன்பு குறிப்பிட்டபடி, ஓடிவிட்ட தில்லைவாழ் அந்தணர்கள் திரும்பிவந்து நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருந்தால் அவர்கள் உமாபதி சிவாச்சாரியாரைப் போலவே தம்மையும் சிவாச்சாரியார் என்றே தரித்துக்கொண்டிருப்பார்கள். ஆகவே இன்று நாம் பார்க்கிற தீட்சிதர்களே தில்லைவாழ் அந்தணர் என்று இனியும் எண்ணிச் சைவர் ஏமாந்து போகக்கூடாது. தீட்சிதர் என்பது சுமார்த்தப் பிராமணருக்குரிய பட்டங்களில் ஒன்று. பண்டைக்காலத்தில் கோவிந்த தீட்சிதர், நீலகண்ட தீட்சிதர், முத்துசாமி தீட்சிதர் என்ற பெயர்களும், நம் காலத்தில் இராமச்சந்திர தீட்சிதர் சேங்காலிபுரம் தீட்சிதர் என்ற பெரியார் பெயர்களும் சிந்திக்கத் தக்கவை.

மேலும் வைணவரிடம் தீட்சிதர் என்ற பட்டம் உண்டு. வடமலையப்ப பிள்ளையன் காலத்தில் (சு. 1650) நாராயண தீட்சிதர் என்ற வைணவப் பெரியார் தென்திருப்பேரை எம்பெருமானான மகாநெடுங்குழைக் காதர் மீது பாமாலை பாடி தம்மைச் சிறையிலிருந்து விடுவிக்குமாறு செய்தார். தீட்சிதர் என்ற பட்டம் யார் வேண்டுமானாலும் தரிக்கலாம். சென்ற நூற்றாண்டில் தில்லைச் சுமார்த்த பிராமணர் அதைத் தாங்கள் தரித்துக் கொண்டார்கள். சைவர்களால் இவர்கள் சுந்தரர் கூறும் தில்லைவாழ் அந்தணர் என்று தவறாகக் கருதப்பட்டார்கள்.

சைவர்கள் இக்கருத்துக்களை மனத்தில் கொள்வார்களாக! 1857 முதல் இன்றுவரை இன்றைய தீட்சிதர்கள் நடராஜர் கோயில் நிர்வாகத்தையும் பூசையையும் நடத்தி வந்ததனால் இவர்கள் தில்லைவாழ் அந்தணர்கள் ஆகிவிடமாட்டார்கள். இக்கோயில் பூசை ஸ்தானிகம் ஆகிய யாவும், "தில்லைவாழ் அந்தணர்" என்று திருமுறைகளில் சொல்லப்பட்டவர்களுக்கு உரியதேஅன்றி இத்தீட்சிதர்களுக்கு உரியது அன்று. சைவப் பெருமக்கள் இதை மனத்தில் கொண்டு தக்க முடிவு எடுத்து மேற்கொண்டு இந்தத் தீட்சிதர்களைக் கோயிலிலிருந்து அகற்ற முயற்சி எடுப்பார்களாக.

தில்லையம்பலத்தில் தெய்வத் தமிழுக்கு மதிப்பில்லை!

நன்றி : சித்தாந்தம் மே 2008

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

பெரியபுராணம் புலப்படுத்தும் வாழ்க்கை நெறி

(புலவர். ச.மு. விமலானந்தம்)

5. புலையர் புனிதராதல்

சோழ மண்டலத்தில் மேற்கா நாட்டைச் சேர்ந்த ஆதனூரைச் சார்ந்த புலைப்பாடியில் புலையர் குலத்தில் நந்தனார் தோன்றினார். அவர் மறந்தும் அயல் நினைவின்றி சிவசிந்தனையோடிருந்தார். அறம்புரி கொள்கையராய்ச் சிவத்தொண்டின் நெறி நின்றார். சிவாலயங்களிலுள்ள பேரிகை முதலானவற்றுக்குத் தோல், வார் முதலியவற்றையும், வீணை, யாழ் முதலியவற்றுக்கு நரம்புகளையும் தந்துவந்தார். அவர் கோயிலின் முன் நின்று பேரன்பு மிகுதியினால் பாடியாடுவார்.

ஒரு நாள் நந்தனார் திருப்புன்கூருக்குச் சென்றார். அவர் அங்குள்ள கோயிலின் முன் நின்று இறைவனை நேரே கண்டு வணங்க வேண்டும் என்று விரும்பினார். ஆனால் இறைவரின் திருமுன்பு இருந்த நந்தி மறைத்தது. அதனால் அவர் வருந்த, இறைவர் நந்தியை விலகியிருக்கச் செய்தார். (இன்றும் அந்தக் கோயிலில் நந்தி விலகியிருப்பதைக் காணலாம்) நந்தனார் இறைவனை நேரே கண்டு வணங்கிப் பாடியாடி மகிழ்ந்தார். பிறகு அக்கோயிலில் பின்பக்கத்திலிருந்த பள்ளத்தைத் தோண்டிக் குளமாக்கினார்.

நந்தனார் தில்லைக்குச் சென்று நடராசரை வணங்க வேண்டும் என விரும்பினார். ஆனால் அது தம் இழிகுலத்துக்குப் பொருந்தாது எனக் கருதினார். மீண்டும் தில்லைக்குப் போக வேண்டும் என்று விரும்பினார். ஒவ்வொரு நாளும் "நாளைப் போவேன்" என்று கூறினார். அதனால் அவருக்குத் "திருநாளைப் போவார்" என்ற பெயர் வழங்கப்பட்டது.

நந்தனார் தில்லையின் எல்லையை வணங்கி வலம் வந்தார்; தில்லை நகருக்குள் செல்ல அஞ்சினார். ஆனால் உள்ளே சென்று வணங்க விரும்பினார். "என் இழிபிறவி தடையாயுள்ளதே. நடராசரைக் கண்டு கும்பிடுவது எவ்வாறு?" என எண்ணிக்கொண்டே உறங்கினார். இறைவர் அவர் கனவில் தோன்றி, "இப்பிறவி ஒழிய எரியில் மூழ்கி தில்லையந்தணருடன் பொன்னம்பலத்துள் வருக" என்றருள் செய்தார். பின் தில்லையந்தணரின் கனவில் தோன்றி, நந்தனாருக்குத் தீ மூட்டித் தருமாறு கூறியருளி மறைந்தார்.

அந்தணர்கள் தீ மூட்டினர். திருத்தொண்டராகிய நந்தனாரிடம் சென்று, "ஐயரே, அம்பலவர் அருளியபடி தீ மூட்டியுள்ளோம்; வருக" என அழைத்தனர். நந்தனார் "நான் கடைத்தேறினேன்" எனத் தெளிந்து, இறைவனடிகளை நினைந்தவண்ணம் தீயில் மூழ்கினார். அவரது பழம்பிறவி ஒழிந்தது. மார்பில் பூணூலும், தலையில் சடையும் விளங்கத் தீயிலிருந்து வெளிப்பட்டார். மண்ணவர் மகிழ்ந்து துதித்தனர். அந்தணர் யாவரும் அவரது அடியை வணங்கினர். நந்தனார் பொன்னம்பலத்துள் புகுந்தார். ஆண்டவன் அருளால் யார் கண்ணுக்கும் தெரியாமல் மறைந்துவிட்டார். அந்தணர்கள் அதிசயித்தனர்.

இறைவர் நந்தனாரைத் தீயில் மூழ்கி எழச் செய்யாமலே அருள் செய்திருக்க முடியும். ஆனால் நந்தனாரின் ஆழ்மனத்தில் தம் பிறவி இழிபிறவி என்ற எண்ணம் ஆழப்பதிந்திருந்தது. அதனை அவர் மனத்திலிருந்து போக்கவே தீயில் மூழ்கியெழச் செய்தபிறகு அருள் செய்தார்.

சேக்கிழார் நந்தனார் வரலாற்றில் நல்ல புரட்சி செய்துள்ளார். புலையரான நந்தனார் தீயில் மூழ்கியெழ அந்தணர்களைத் தீ மூட்டச் செய்தார்; ஐயர்களே நந்தனாரை "ஐயரே" என அழைக்கச் செய்தார்; அவரை இறைவனே விரும்பும் திருத்தொண்டராக மதிக்கச் செய்தார். அவர் அடிகளை வணங்கச் செய்தார். புலையரும் புனிதராகலாம்; அந்தணர் மதிக்கும் ஐயர் ஆகலாம், ஆண்டவன் அருளைப் பெறலாம். பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை, என்ற அரும்பெருங்கருத்துகளை அழகாய் உணர்த்தியுள்ளார். நாம் எத்துணையும் பேதமின்றி எவ்வுயிரையும் தம்முயிராய்க் கருதி வாழ்வோமாக!

(தொடரும்)

சமணம் காரணமன்று

(தமிழாகரர். தெ. முருகசாமி, புதுச்சேரி)

காரைக்கால் அம்மையார்க்கும் அவரது கணவன் பரமதத்தனுக்கும் இருந்த ஏதோ ஓர் இடைவெளி பற்றிய கருத்தைப் பாவலர்மணி ஆ. பழநி அவர்கள் 2008 மார்ச்சு மக்கள் சிந்தனையில் நுட்பமாக விளக்கியிருந்தார்கள். அந்த இடைவெளிக்குச் சமண சமயச் சார்பு காரணம் ஆகலாம் என 2008 ஏப்ரல் மக்கள் சிந்தனையில் முனைவர். க.ப. அறவாணன் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

சமண சமயச் சார்பு காரணமன்று என்பதைக் கூற விழைகின்றது இந்த என் எழுத்து.

தத்தன் என்பது சமணப் பெயர், வாசவதத்தை என்பவள் சமணப் பெண். எனவே பரமதத்தன் சமணன் என்கிறார் க.ப.அ.

காரைக்கால் அம்மையின் தந்தை பெயர் தனதத்தன். அவர் சமணரா? மெய்ப்பொருள் நாயனார் கதையில் நாயனாரின் அரண்மனைக் காவலனாக இருந்தவன் தத்தன். கண்ணப்பரின் தாய் பெயர் தத்தை. எனவே தத்தன், தத்தை – சமணத்திற்குரிய பெயர்கள் என அறுதியிட முடியாது. கிளிக்குத் தத்தை என்ற பெயரும் உண்டு. ஆக இவ்விருபெயர்களும் சமணத்திற்குரியதல்ல என்பதற்குப் பெரிய புராணமே அகச் சான்றாக உள்ளதால் பரமதத்தன் சமணன் அல்லன்.

பரமதத்தன் சமணன் என்பதால்தான் அவன் புனிதவதியாரைப் பிரிந்து பொருளீட்டி வரும்போது சைவம் மிகுந்த சோழ நாட்டிற்கு வாராமல் சமணம் சார்ந்த பாண்டி நாடு சென்றான் என்பது க.ப.அ. கருத்து. பாண்டி நாடே செல்லாமல் வடக்கே கடலூரோ, மாமல்லபுரமோ சென்றிருந்தாலும் சமணர் ஆட்சிதான் இருந்தது. எனவே சமணம் என்பதற்காகச் சென்றான் என்பதை ஏற்க முடியாது.

அம்மையார், கணவன் அடியார்க்கு உணவு படைப்பதை வெறுப்பவன் என்பதால் அவனில்லாமல் உணவு படைத்தது தமிழ் மரபு மீறலாகும் என்கிறார் க.ப.அ. தன் கணவன் சமணன் என்பதால் இவ்வாறு உணவளித்தார் என்பது கருத்தாகக் கூறப்படுகிறது.

திருமணமானதும் தனிக் குடித்தனம் செய்யும் அம்மையாரின் செயல்பற்றிச் சேக்கிழார் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

நம்பர்அடி யார்அணைந்தால் நல்லதிரு அமுதளித்தும்
செம்பொன்னும் நவமணியும் செழுந்துகிலும் முதலான
தம்பரிவி னால்அவர்க்குத் தகுதியின்வேண் டுவகொடுத்தும்
உம்பர்பிரான் திருவடிக்கீழ் உணர்வுமிக ஒழுகுநாள்.

இப்பாடல் மாம்பழம் வைத்து உணவு படைக்கும் முன்னுள்ள அம்மையாரின் பண்பை உணர்த்துகிறது. இப்பாட்லைக் கொண்டு அம்மையார் கணவனுடனிருந்து இப்படிச் செய்தாரா இல்லையா எனத் தெளிவாகக் கூறமுடியாவிட்டாலும் கணவனுக்குத் தெரியாமல் செய்திருக்க மாட்டார் என்பதை உறுதிப்படுத்தலாம். உணவு மட்டுமின்றி, பொன்னும் மணியும் ஆடையும் தந்துள்ளதால் இவற்றையெல்லாம் கணவனுக்குத் தெரியாமல் மறைத்து எப்படிச் செய்திருக்க முடியும்?

இதற்கு ஆதாரமாகவே அடுத்த பாடலில் சேக்கிழார் "பாங்குடைய நெறியின்கண்பயில் பரமதத்தனுக்கு" மாங்கனி இரண்டு வந்ததாகக் கூறுகிறார். எந்தப்பாங்குடைய நெறியின் கண் பயில்பவன் என்றால், மனைவியின் பாங்குடன் பயில்பவன் என்பதுதானே கருத்து. இதனால் கணவனும் மனைவியுமாக அமுதளித்தனர் எனத் தெளிவாகத் தெரிவதால் "கணவன் சமணன், அடியார்க்கு உணவளிக்க விரும்பாதவன், எனவே கணவனின்றி மாம்பழ விருந்து வைத்தார்" என்பது பொருந்தாது.

கணவன் கடையில் இருந்தான் என்பதாலும் வந்த அடியாரின் மிகு பசியைத் தீர்க்கவேண்டும் என்றதாலும் கணவனின்றி அம்மையார் உணவு படைத்ததில் தவறில்லை, "உணவின் மிகு வேட்கையினால் ஒருவர் மனையுட் புகுந்தார்" எனச் சேக்கிழார் அடியாரின் நிலையைக் கூறுகிறார். "வந்த மெய்த் தொண்டர் நிலைகண்டு அடியாரைப் பசிதீர்ப்பேன்" என அம்மையார் நினைப்பதாகவும் சேக்கிழார் கூறுகிறார். இவற்றால் பசிதீர்ப்பது உடடினத் தேவை எனத் தெரிகிறது. இந்நிலையில் ஆபத்துக்குப் பாவமில்லை என்பதால் கணவனின்றி விருந்தளித்ததைப் பெருங்குற்றமாகக் கருதமுடியாது. அம்மையாரின் இந்நிலைக்குக் கண்ணகி, சீதையைப் பொருத்திப் பார்ப்பதும் சரியன்று. சிறுத்தொண்டர், அப்பூதி, இளையான்குடியார் போன்றோர் பரமதத்தனைப் போலக் கடை வாணிபம் செய்பவர்கள் இல்லை என்பதும் சிந்தனைக்குரியதாகும்.

மேலும் கணவன் இல்லாத நிலையில் தான் அம்மையார் அடியார்க்கு வழக்கமாக அமுதளிப்பதாக இருந்தால்தான் அதைத் தமிழ் மரபுக்கு மீறியதாக்க் கூறலாம். தவிர்க்கக்கூடிய காரணமிருந்த நிலையில் ஒருமுறை கணவனின்றி உணவளித்ததைப் பெரிதுபடுத்துவது ஏற்புடையதாகாது. ஏனெனில் கண்ணகி சீதையரின் கவலைகள் கூட ஒருமுறை வந்த விருந்துக்குக் கவலைப்படுவதாக இல்லை. பல முறை விருந்துபசரிப்பு நிகழ்த்த முடியாமல் போவதற்காகவே ஏங்குகிறார்கள் என்பதால் அம்மையாரின் ஒரு முறையான விருந்தை அதாவது கணவனில்லாமல் செய்த விருந்தைக் குறை கூறுவது எந்த வகையிலும் நடுநிலையன்று எனலாம்.

பொதுவாகச் சேக்கிழார் கூற்றின்படி அம்மையார் புராணத்தை நோக்கினால் பரமதத்தனுக்கும் அம்மையாருக்கும் பொருத்தமில்லாத தாகவே மணவாழ்க்கை அமைந்ததை உணரலாம்.

"மயிலைக் காளைக்குக் கலியாணம் செய்தார்கள்" என்ற உவமையில் பொருத்தமில்லாக் குறிப்புகள் அடங்கிவிட்டன எனலாம். கருநிறக் குடையைக் கண்டதும் காளை மிரளும். இந்நிலைதான் கதையின் உள்ளடக்கமாக அமைந்துவிடுகிறது.

புகுந்த இடம் போன அம்மையார் அங்கு வாழாமல் தம் சொந்த ஊரில் வாழ்கிறார், தம் சொந்த வீட்டில் வாழவேண்டிய பரமதத்தன் மனைவியின் ஊரில் வாழ நேரிடுகிறது.

மனைவிக்குள்ள கடவுள் பக்தி கணவனுக்கு இல்லை என்ற குறிப்பு கணவனது பெயரிலேயே குறிப்பாக அமைந்துள்ளது. பரமனையே தத்தம் செய்தவன் எனப் பொருத்தமர்ன பொருளைக் கூறலாம். தத்தம் செய்தல் என்பதை விரித்தால் கணவனைப் பொருத்தமட்டில் எல்லாவற்றையுமே தத்தம் செய்கின்ற நிலையை உணரலாம். பிறந்தகத்தில் வாழாத தத்தம், மனைவியைத் தத்தம் செய்தது போலப்பிரிந்து வாழ்தல், பெற்றோரைப் பேணாத நிலை போன்றவற்றை எண்ணினால் கணவனுக்குள்ள பொருத்தமின்மை விளங்குவது போல, அம்மையாருக்கும் புக்ககத்தில் வாழாதநிலை, கணவனோடு உடனிருந்து வாழமுடியாத சூழல் போன்றனவையைக் கூறலாம். இப்படியாக இருவர்க்கும் உள்ள பொருத்தமற்றவற்றுள் சமணம் என்ற கருத்துச் சிறிதும் இடமில்லையாதலால் அதை அவர்களின் இடைவெளிக்கான காரணங்களுள் ஒன்றாகக் கருத முடியா என்பதையே உண்மை எனலாம்.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

அருட்திரு பாம்பன் சுவாமிகள் அருளிய திருக்குன்றக்குடிப்பதிகம் உரை

(சைவத்தமிழ்மணி.வித்துவான். க. கதிரேசன்)
(குன்றக்குடி ஆதீனப் புலவர்)

ஈடில்இ ணைமலர்த் தாள்கள் எண்ணுவது உம்கழல் அன்பர்
தேடுஒரு ஞானமும் நல்லோர் சேர்க்கையு மேநிலை யாம்என்று
ஓடுஇழி சிந்தையை வாங்கி உன்னும்ம காசிவ யோகில்
கூடிஅ ளாவுறு கோவே குன்றக் குடியுறை தேவே.

கூட்டுமுறை

ஓடு இழிசிந்தையை வாங்கி, அன்பர் எண்ணுவது, கழல்நிலை ஈடில்இணைமலர்த்தாள்களும், அன்பர் தேடு ஒரு ஞானமும், நல்லோர் சேர்க்கையுமே ஆம் என்று உன்னும் மகாசிவயோகில்... தேவே; அத்தகு அன்பர் நிலையை எனக்கும் அருள்க என்று வருவித்துக்கூட்டுக.

குறிப்புரை

ஓடுஇழிசிந்தை = (ஓடு சிந்தை, இழிசிந்தை என்று தனித்தனிக் கூட்டுக) மதயானைபோல் கண்டபடி ஓடித் தன்நிலையில் தாழும் மனம். வாங்கி = தடுத்துமீட்டு. கழல்நிலை = வீரக்கழல் நிலைத்த, ஈடுஇல் = ஒப்பற்ற, இணை = இரண்டு, தேடு = அவாவும். நல்லோர் சேர்க்கை = அடியார் கூட்டம். ஆம் = ஆகும் என்று, கூடி = பொருந்தி. அளாவுறு = அவருடன் கலக்கும்.

பொழிப்புரை

மதயானையைப்போல் கண்டபடி ஓடித் தன்னிலையில் தாழும் மனத்தைத் தடுத்து மீட்டு அடியார்கள் நினைப்பது, வெற்றியின் குறியீடான வீரக்கழல்நிலைத்த உனது ஒப்பற்ற இருமலர்கள் ஒத்த உன் திருவடிகளையும், அடியார்தேடும் ஞானமும், அடியார் கூட்டமுமேயாகும் என்று இருக்கும் அவரது மேன்மைபொருந்திய சிவயோகத்தில் அவருடன் பொருந்திக் கலக்கும் கோவே, குன்றக்குடியுறை தேவே; அத்தகு அன்பர் நிலையை எனக்கும் அருள்க.

விளக்கம்

உரன் என்றும் தோட்டியான் ஓரைந்தும் காவாவழி மனம்

மதயானைபோல் தறிகெட்டு ஓடித் தன்னிலையில் தாழ்வது ஆதலின் "ஓடு இழிசிந்தை" என்றார்.

கழல், வெற்றியின் குறியீடு. பெருமான் வெற்றியேயன்றிப் பிறிதறியாதவன் ஆதலின் அது "நிலைகழல்" எனப்பெற்றது.

பெருமான் திருவடிகளைக் குறிக்கும் "ஈடில் இணைமலர்த்தாள்கள்" என்பதை ஈடில்தாள்கள், இணைதாள்கள், மலர்த்தாள்கள் என்று அடைகளைத் தனித்தனி கூட்டுக.

அவன் தன்னேரில்லாத் தலைவனாதலின் அவை "ஈடில்தாள்கள்" என்றும், தொன்மைத் திருக்கோலமாகிய அம்மையப்பனாய் எழுந்தருளி அருள்கின்றவனாதலின் அவை "இணைதாள்கள்" என்றும், மலர்போல தன்னைப் பெற்றவர்க்குப் பெருமகிழ்ச்சியும் தண்மையும் பேரின்பமும் வழங்குவனவாதலின் அவை "மலர்த்தாள்கள்" என்றும் குறிக்கப்பெற்றன.

உலகில் நாம் தேடிப்பெறவேண்டுவதும், தன்னொப்பின்றித் தலை நிற்பதும் ஞானமே யாதலின் "தேடு ஒரு ஞானம்" எனப்பெற்றது. மேலும் ஞானமே வடிவான அவனை அடைதற்குரிய கருவி ஞானமே என்ற அப்பரடிகள் முன் கூறப்பெற்றது.

மகாசிவயோகு பற்றியும், அதன் நிறை பயன் பற்றியும் அப்பரடிகளின்

"உயிரா வணம்இருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருஎழுதி
உயிர்ஆ வணம்செய்திட்டு உன்கைத் தந்தால்
உணரப் படுவாரோடு ஒட்டி வாழ்தி"

திருமுறை - 6. திருவாரூர்-1

இப்பகுதியில் "உயிராவணம் இருத்தல்", "உற்றுநோக்கல்" "உள்ளக்கிழியின் உருஎழுதுதல்" "உயிர் ஆவணம் செய்தல்" "உன் (பெருமான்) கைதருதல்", என்பன மகாசிவ யோகிற்குரிய படிமுறைகள் "உணரப்படுவாரோடு ஒட்டி வாழ்தல்" என்பதே யோகநிலை. இதனை அடிகள், "மகாசிவயோகிற் கூடிஅளாவுதல்" என்கிறார்.

இலக்கணக்குறிப்பு

மலர்த்தாள் - உவமைத்தொகை. ஓடுசிந்தை, இழி சிந்தை - வினைத்தொகைகள். சேர்க்கையுமே - ஏகாரம் தேற்றப்பொருளது.

(தொடரும்)

அருளாலய ஆண்டு

(தமிழாகரர். தெ. முருகசாமி, புதுச்சேரி)

தமிழாண்டு தமிழாண் டென்று
தமிழ்நாட்டில் பலபேர் இன்று,
அமிழ்தான "தை"யா! அன்றி
அறிந்திட்ட "சித்திரை" தானா?
இமிழ்கடலின் மீனாய்த் துள்ளி
எடுத்தியம்பிக் குழப்பு கின்றார்!
உமிழ்கின்ற அதற்காம் உண்மை
உரைப்பாரைத் தேடி நின்றேன்!

காலத்தின் பிரிவைத் தானும்
கனத்தபெரும் ஆண்டு, என்றும்
சீலமிகு திங்க ளோடு
சிறப்பான நாள்கள் என்றும்
கோலமிகு ஞாலந் தன்னில்
கொண்டாலும் தமிழில் அந்த
ஆலமர விரிவாய் உள்ள
ஆண்டிற்குப் பெயர்தான் இல்லை!

அறுபதாண் டென்று கூறும்
அப்பிரபவ விபவ எல்லாம்
உறுதமிழின் பெயர்கள் இல்லை!
உண்மையிவ் வாறி ருக்க
உறுமுகிறார் சிலபேர் இங்கே
உரைத்திட்ட அறுபா ணாண்டைக்
கறுவுகிற நெஞ்சத் தாலே
கனிதமிழ் ஆண்டென் றேதான்!

தமிழர்தம் ஆண்டிற் குத்தான்
தக்கபேர் இல்லென் றாலும்
தமிழர்தாம் திங்க ளுக்குத்
தந்திட்ட பெயர்கள் எல்லாம்
அமிழ்தான இலக்கி யத்தில்
அங்குமிங்கும் காண லாகும்!
அமிழ்தாக அவற்றின் அடைவை
அறைந்திட்டார் சம்பந் தர்தான்!

மட்டிட்ட புன்னை என்ற
மயிலாப்பூர் பதிகந் தன்னில்
அட்டியின்றி ஐப்பசி போன்ற
ஐவகைப்பேர் கூறும் போது
ஒட்டியகார்த் திகையோ டேதை
உயர்மாசி பங்குனி என்றார்
விட்டிட்ட திங்க ளைத்தான்
விவரித்தார் விழாவின் குறிப்பால்!

திங்களை இவ்வா றாகத்
தெரிவித்த சம்பந் தர்தான்
பொங்கிடும் கோளாறு பதிகப்
பொலிவினில் நாள்கள் பேரை
மங்காமல் அடுக்கு கின்றார்!
மன்னுபுகழ் ஞாயி றோடே
திங்களுடன் செவ்வாய் நற்புதன்
திகழ்வியாழன் வெள்ளி சனியாய்!

இவ்வாறாய்த் திங்க ளுக்கும்
இருக்கின்ற நாள்க ளுக்கும்
ஒவ்விடும் பெயர்கள் தம்மை
ஒருவாறு கூறல் போலச்
செவ்விய தமிழாண் டிற்குச்
செப்பிடப் பெயரி ருந்தால்
ஒவ்வியே உரைத்தி ருப்பார்
ஒண்டமிழ் நாட்டோர் தாமே!

இப்படி யாகக் காணும்
இருந்தமிழ்க் காலப் பிரிவில்
அப்படி இப்படி யாக
அருந்தமிழ் திங்கள் நாள்கள்
ஒப்பியே கூறு மாறு,
உணர்ந்தாலும் ஒண்டமிழ் ஆண்டைச்
செப்பிட வேண்டிச் சான்றோர்
செப்பினர் வள்ளுவ ராண்டை!

மறைமலை யடிகள் போன்ற
மாத்தமிழ் அறிஞர் கூடி
முறைப்படுத் திட்ட ஒன்றை
முத்தமிழ்ச் சட்ட மன்ற
நிறைவான ஆளுநர் உரையில்
நீள்புகழ் தைம்முதல் நாளை
அறைந்திட்டார் தமிழாண் டென்று!
அதுமுதல் வந்தது வம்பே!

கூறிடும் அறுபா னாண்டும்
குறிக்காது தமிழை யென்று
கூறுவது மெய்யென் றாலும்
குமுறுகிறார் ஒத்துக் கொள்ள!
கூறுகிற குதர்க்கத் தாலே
குழப்பியே தமிழர் தம்மைக்
கூறிட்டுப் பார்த்து நாளும்
குளிர்காய நினைத்திட் டார்கள்!

பகுத்தறி வற்ற தோடு
பாசிசம் என்றே கூறி
உகுத்திட்டார் மமதை என்ற
உயர்வில்லா வார்த்தை, இன்சொல்
வகுத்திட்ட வள்ளுவர் சொன்ன
வளர்காயைக் கவர்த லாகத்
தொகுத்திட்டார் நேர்யநெஞ் சாலே!
தொடுத்திட்டார் வார்த்தை அம்பை!

என்றுநான் சினந்த வாறு,
இருந்திட்ட வேளை தன்னில்
ஒன்றுரைக்க வந்தா ரொருவர்
உன்கோபம் தணியெனக் கூறி
நன்றுநம் சம்பந் தர்தான்
நயமுறச் சொன்ன ஞாயிறு
அன்றுமுதல் இன்று காறும்
அறைகின்றோம் வார முதலாய்!

ஞாயிற்றின் இயக்கத் தாலே
ஞாலந்தான் நடப்ப தாலே
ஞாயிற்றை நாளின் முதலாய்
ஞாலத்தார் கொண்டா ரோதான்?
ஞாயிறுதான் நாள்முத லென்றால்
ஞாலத்தின் நடப்பிற் கெல்லாம்
ஞாயிறுதான் மூலம் என்ற
ஞானத்தால் விரித்தார் ஒன்றை!

ஞாயிற்றின் வடக்குப் பயணம்
நற்றையில் தொடங்குவ தாலே
ஞாலத்தமி ழாண்டாய் அஃதை
நாம்கொள்ளல் ஆகுந் தானே!
ஞாயிற்றைக் கடவுள் போல
நம்இளங்கோ அடிகள் தாமும்
ஞாயிற்றைப் போற்று கின்றார்
நமக்கதுதான் சாட்சி யன்றோ?

என்றென்னைப் பொட்டில் தட்டி
எழுப்பியுரைத் தாரை நானும்
மன்றெலாம் தேடிப் பார்த்தேன்,
மகிழம்பூ மணம்வந் திட்ட
நன்றரு ளால யத்தின்
நல்லொளி வாயில் தன்னில்
இன்றுதமி ழாண்டெனக் கூற
இடும் பொங்கல்ஒலி கேட் டேனே!

பரமதத்தனைப் பாராட்டுவோம்!

(புலவர். ச.மு. விமலானந்தன், எம்.ஏ.,பி.எட்.)

புனிதவதி பின்னாளில் "காரைக்காலம்மையார்" எனப் போற்றப்படுவதற்கு உதவியவன் அவர் கணவன் பரமதத்தன். இருவருக்கும் இடைவெளியோ, மனவேறுபாடோ இல்லை. பரமதத்தன் முதலில் புனிதவதியைத் தன் மனைவியாகக் கொண்டு வாழ்ந்தான். இறையருளால் மாங்கனியை வருவித்த பிறகு, புனிதவதியாரைத் தெய்வமாக மதித்தான். அவருக்குத்தான் கணவனாக இருக்கத் தகுதியற்றவன் என்றும், அவரை இல்லற இன்பத்தில் ஈடுபடுத்தக்கூடாது என்றும் கருதி அவரை விட்டு விலகினான். அவ்வாறு அவன் செய்ததால்தான் புனிதவதியார் காரைக்காலம்மையாராக உயர்ந்து இறையருள் பெற்று நாயன்மார்களில் ஒருவராகும் பேறு பெற்றார்.

எனவே பரமதத்தன் புனிதவதியை விட்டு நீங்கியதற்குச் சமயம் காரணமன்று. பரமதத்தன் சமணனாக இருத்தல் வேண்டும் என்பதற்கு எள்ளளவு சான்றும் இல்லை. "தத்தன்" என்ற பெயர் சமணச் சார்பினது என்பது தவறு. பரமதத்தனின் மாமனார் புனிதவதியார் தந்தை தனதத்தன். இந்தப் பெயரிலும் "தத்தன்" என்று வருவதை மறந்துவிடலாமா? அப்படியானால் அவரும் சமணசமயத்தவரா? மெய்ப்பொருள் நாயனாரின் மெய்க்காப்பாளன் பெயர் தத்தன். அவன் சமண சமயத்தவனோ? (அல்லன்)

விவேகானந்தர் தத்தர் குடும்பத்தில் பிறந்தவர்; அவர் பாட்டனார் பெயர் ராம்மோகன் தத்தர்; தந்தையார் பெயர் விசுவநாத தத்தர். அந்தக் குடும்பத்தினர் சமண சமயம் சார்ந்தவர் அல்லர். தத்தன், தத் என்பன வங்காளத்தில் வாழும் குடும்பத்தினர் பெயர்; சமண சமயப் பெயரன்று.

பெருங்கதையில் இடம்பெறும் "வாசவதத்தை" என்பதிலுள்ள "தத்தை" சமணப் பெயரன்று. "தத்தை" என்பதற்குக் கிளி என்று பொருள். கிளிபோன்ற அழகுடையவள் எனப் பொருள் கொள்ள வேண்டும். கிளிபோன்று இனிமையாய்ப் பேசுபவள் எனவும் கொள்ளலாம்.

எனவே, பரமதத்தனை சமண சமயத்தைச் சார்ந்தவன் என்று கொள்வது தவறு.

நாம் சேக்கிழார் சொல்லாததை எண்ணிப் பார்க்கலாமா? அதுவும் தவறாக ஊகிக்கலாமா?

புனிதவதியார் பரமனார் திருத்தொண்டர்க்கு மாம்பழம் அளித்ததாகப் பரமதத்தனிடம் கூறியபோது, அவன் "ஏன் அளித்தாய்" எனக் கேட்கவும் இல்லை; சினங்கொள்ளவும் இல்லை. எனவே அவன் சிவனடியார்க்கு மாம்பழம் வழங்கியதை விரும்பவில்லை என்று கருதுவது தவறு.

சேக்கிழார் சொல்லவந்த வரலாற்றின் தலைவி புனிதவதியார் (காரைக்காலம்மையார்). அவர் நாயன்மாரும் ஆவார். அதனால் அவரைச் சைவசமயத்தைச் சார்ந்தவர் என்று குறிப்பிடுகிறார். பரமதத்தனையோ, அவன் தந்தையையோ மாமனரையோ சமயத்தைச் சேர்த்துக் குறிப்பிடவில்லை. அதனால் பரமதத்தனையோ, மற்றவரையோ சமண சமயத்தவர் என்று கொள்ளலாமா? (கொள்வது தவறு)

இங்குப் பெண் நாயன்மாராகிய காரைக்காலம்மையாரின் கணவனைச் சைவ சமயத்தைச் சார்ந்தவன் என்று குறிப்பிடாதது போலவே ஆண் நாயன்மார்களின் மனைவியரையும் சைவ சமயத்தைச் சார்ந்தவராகக் குறிப்பிடாததையும் கருத்தில்கொள்ள வேண்டும்.

பரமதத்தனின் சமயச் சார்பு வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை; எனினும் புனிதவதியாரைப் பரமதத்தனுக்கு மணம் பேசவந்தவர்கள் தொல்குலத்து வணிகர். "தொல்குலத்து வணிகர் மகட் பேசுதற்குத் தொடங்குவார்" என்று குறிப்பிடுகிறார் சேக்கிழார். மேலும் அவர்களை "மூதறிவாளர்" என்றும் குறிப்பிடுகிறார். ("வந்தமூ தறிவாளர் மணம் குறித்த மனை புகுந்து") மேலும் "பாடுபெறு புகழ் வணிகன் பயந்த குல மைந்தனுக்கு" என்றும் குறிப்பிடுகின்றார். புனிதவதியின் தந்தையும் "முறைமையினால் இசைந்ததாகவும் குறிப்பிடுகிறார். எனவே", இது சைவ சமயத்துக்கும், சமண சமயத்துக்கும் இடையே நடந்த கலப்புத் திருமணமன்று. இருவீட்டாரும் சைவ சமயத்தினரே. எனவே, தன் மாமனாரின் பெயரிலுள்ள தத்தன் என்ற சொல்லைத் தன்பெயரிலும் கொண்ட பரமதத்தன் சைவ சமயத்தினனே! சமணசமயத்தைச் சார்ந்தவன் அல்லன்.

பாண்டிய மன்னன் நெடுமாறன் மங்கையர்க்கரசியாரைத் திருமணம் செய்துகொண்டபோது சைவ சமயத்தைச் சார்ந்திருந்தான். பிறகு சமண சமயம் பாண்டிய நாட்டில் பரவிய போதுதான் சமண சமயத்தைச் சார்ந்தான். இதற்குச் சான்றுகள் வருமாறு.

"........ செய்வகை இடையே தப்பும் தென்னவன் பாண்டிநாட்டு
மெய்வகை நெறியில் நில்லா வினைஅமண் சமயம்மிக்கு"
(2497)

"தென்னவன் தானும் முன்செய் தீவினைப் பயத்தினாலே
அந்நெறி சார்பு தன்னை அறாமன நினைத்து நிற்ப"
(2498)

இந்தப் பாடல்கள் மூலம் பாண்டியன் திருமணத்திற்குப் பிறகே சமண சமயத்தைச் சார்ந்தான் என்று தெரிகிறது. (திருமணத்திற்கு முன்னரே சமணனாய் இருந்திருப்பின் மங்கையர்க்க்ரசியாரும், அவர் பெற்றோரும் திருமணத்திற்கு இசைந்திரார்)

பரமதத்தன் பாண்டிய நாட்டில் திருமணம் செய்து கொண்ட பெண் சமண சமயத்தைச் சார்ந்தவள் என்பதற்கான சான்று ஏதுமில்லை.

எனவே பரமதத்தன் சமயத்தாலும் வேறுபட்டிருந்தான், முரண்பட்டிருந்தான் என்று கருத எள்ளளவும் இடமில்லை. (சான்று இல்லை)

தான் இல்லாதபோது விருந்தினர் வந்தால் இராமர் அவர்களை உபசரிக்கத்தன் துணையில்லாமல் என்ன துன்பப்படுவாரோ என்று கருதித்தான் சீதை (இராமன்) "விருந்து கண்டபோது என் உறுமோ?" என்று வருந்தினாள்.

கணவர் இல்லாதபோது விருந்தோம்பலைச் செய்யாதிருப்பதுதான் தமிழர் நெறியா? குறள் கூறும் அறமா? பெரியபுராணத்தில் கணவன், மனைவி ஆகிய இருவரும் இருந்தபோதே விருந்தினர் வந்தனர். அதனால் இருவரும் சேர்ந்து விருந்தோம்பினர். இருவரில் ஒருவர் இருந்திருந்தாலும் விருந்தோம்பியிருப்பர். வீட்டில் "என் மனைவி இல்ல என்றோ, கணவன் இல்லை என்றோ" கூறி வந்த விருந்தினரைப் பசியோடு விரட்டியிருக்கமாட்டார்கள். இந்நாளில் கூட நம்

மனைவி இல்லாதபோது வரும் விருந்தினருக்கு உணவகத்தில் உணவளித்து உபசரிக்கிறோமன்றோ?

அதுபோலவே கணவர் இல்லாதபோதும் இல்லத்தலைவி விருந்தோம்புவதுதான் முறை; அறம். கணவர் இருந்தால் தான் மனைவியர் விருந்தோம்ப வேண்டும், கணவர் இல்லாவிட்டால் விருந்தோம்பக்கூடாது என்பது ஆணாதிக்கத்தின் வெளிப்பாடு. இது தமிழர் அறமன்று; திருக்குறள் நெறியுமன்று.

கணவர் இல்லாதபோது புனிதவதியார் விருந்தோம்பியதில் சேக்கிழார் குற்றங் காணவில்லை; புகழ்கிறார். புனிதவதியாரின் கணவனும் இதைக் குற்றமாகக் கருதிக் கோபங்கொள்ளவில்லை. இதைக் குற்றமாகக் கருதுவதே குற்றமாகும்.

பரமதத்தன், தன் மனைவி புனிதவதியாரின் தெய்வத்தன்மையை அறிந்த பிறகு அவருடன் ஒட்டாமல் விலகியிருந்தது அவன் பெருந்தன்மையாகும். சிறந்த பண்புமாகும். அவ்வாறின்றி அவன் அவரிடமிருந்து விலகாது, தெய்வத்தன்மையை இகழ்ந்து, தன்னோடுதான் வாழவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தால் புனிதவதியார் காரைக்காலம்மையாராக உயர்ந்து, நாயன்மாராகி மூத்த திருப்பதிகம் பாடி இறைவன் "அம்மையே வருக" என வரவேற்க இறைவன் திருவடியில் வாழும் பேற்றைப் பெற்றிருக்க முடியுமா? இதற்கெல்லாம் மூல காரணமாக இருந்த பரமதத்தனைப் புகழ்வதற்குப் பதில் இகழலாமா? அவன் சமயத்தையே மாற்றலாமா?

ஆண் நாயன்மார்களுக்கு அவர்கள் புகழ்பெற வெளியில் தெரியாத வேர்களாயிருந்து உதவிய அவர்களின் மனைவியாரைப் போல, பெண் நாயன்மாராகிய காலைரக்காலம்மையாருக்கு அவர் கணவன் பரமதத்தன் உறுதுணை புரிந்துள்ளான் என உணர்ந்து அவனைப் பாராட்டிப் போற்றுவோம்.

இதுபோலவே மருள் நீக்கியார் திருநாவுக்கரசராக உயர உதவிய அவர்தம் தமக்கையார் திலகவதியாரையும் போற்ற வேண்டும். அவரை நாயன்மாராக மதித்துவணங்க வேண்டும்.

சிந்தனை வட்டம்

மக்கட்சிந்தனை சித்திரைத் திங்கள் நான்காம் நாள் இதழில் 20.4.2008ம் நாள் நடந்த குருபூசை விழாவில் தமிழ்மா முனிவரின் திருஉருவப் படத்தைக் கண்டு கழிமகிழ்வு எய்தினேன்.

அன்று ஓர் நாள் குருபூசை விழாவில் எனக்கு அறநிலையத் துறை ஆணையாளராக இருந்த ஆளுடைய பிள்ளை அவர்களால் திருக்குறள்மணி என்ற பட்டமும் பொற்கிழியும், வெள்ளிக் கேடயமும் வழங்கியபோது தமிழ் மாமுனிவர் எந்த திருவுருவத்தோடு காட்சி அளித்தாரோ அந்தத் திருவுருவை இந்த இதழில் கண்டு கழி மகிழ்வு எய்தினேன்.

தொடரும் வழிப்பயணம் என்ற தலைப்பில் மும்பை தமிழ்ச் சங்கத்தார் தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்களுக்கு வழங்கிய வரவேற்பு சிறப்புடன் இருந்தது.

அருப்புக்கோட்டை தேவேந்திரன் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க அழகப்பா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கோடி கொடுத்த கொடைவள்ளல் அழகப்பருக்கும் இந்தியப் பிரதமர் நேரு பெருமகனாருக்கும் உரிய நட்புறவினை எடுத்துக்காட்டிய விழாப் பேருரை மிக இனித்தது. முனைவர் க.ப. அறவாணன் எழுதிய காரைக்கால் அம்மையாரும் பரமதத்தனும் என்ற கட்டுரையில் புனிதவதியாரின்சைவ உணர்வையும் பரமதத்தனின் சமண உணர்வையும் சான்று காட்டி நிறுவியது மிக நன்கு அமைந்திருந்தது.

சிதம்பரத்தில் திருமுறைப் பாடல்கள் பாடியதைத் தடுத்த தீட்சிதர்கள் கொண்ட கடுமையை வரைந்த அருளாலய கூத்தில் விளக்கியிருப்பது மிகமிக நன்று.

– புலவர். **அ.கி. செல்வக்கணபதி,** மதுரை.

ஜி.யு. போப் பற்றித் தவத்திரு பொன்பம்பல அடிகளார் கூறியுள்ள கருத்து உள்ளத்தை உருக்குகிறது. உவகை பெருக்குகிறது.

"ஆன்மா ஈடேற்றம் அவன் தொழில்" என்ற பொன்மொழி "அதற்குத் தகுதியாதல் நம்தொழில்" என்பதையும் உணர்த்துகிறது.

அடிகளாரின் பாராட்டுக்கு உரியோர் அனைவரையும் நாமும் உளமார, உவகையோடு பாராட்டுவோம்!

அறிவிலான் அகமகிழ்ச்சியோடு தருகிறானா? எப்படி, எதனால்? வியப்பாக இருக்கிறதே! அதற்கு என்ன காரணம்? அந்த ஈகையைப் பெறுகின்றவன் செய்த தவமே அதற்குக் காரணம். குறள் 842இன் கருத்து சிறப்பாயுள்ளது.

"கண்ணகியும், காரைக்கால் அம்மையாரும்" என்ற கட்டுரையில் பரமதத்தனின் பண்பைத் தாழ்த்திப் பேசுவதாகப்படுகிறது. பரமதத்தன் மீது சேக்கிழாரோ, அவன் மனைவி புனிதவதியாரோ எக்குறையும் கூறியதாகத் தெரியவில்லை. பரமதத்தனும், புனிதவதியாரும் தனிமனைவாழ்க்கைக்குத் தள்ளப்படவில்லை. தனிமனை வாழ்க்கை நடத்தினர்.அது அந்த இனத்தாரின் பழக்கம். புனிதவதியின் தந்தையாரே தனிக்குடும்பம் நடத்த ஏற்பாடு செய்தார்.

பரமதத்தன் இவறல் (உலோபம்) தன்மையுடையவன் என்பதற்கு எந்தச் சான்றும் இல்லை. வாணிகக்குடும்பம் ஆனதால் பெரும்பொருளீட்டுவதில் நாட்டமுடையவனாய் இருந்தான். புனிதவதியாருக்குக் குறையேதும் வைத்ததாகத் தெரியவில்லை.

பரமதத்தன் இரண்டாவது முறையும், மூன்றாவது முறையும் மாம்பழம் கேட்டது - கேட்க வைத்தது சிவன் செயல்; புனிதவதியாரின் தெய்வத்தன்மையை வெளிப்படுத்துவதற்காகச் செய்தது.

புனிதவதியாரின் தெய்வத்தன்மையை அறிந்த பரமதத்தன் அவரை இல்லறத்தில் ஈடுபடுத்தக்கூடாது என்று கருதியே அவரைவிட்டு நீங்கினான்; அவரை வெறுத்து நீங்கவில்லை. வெறுத்து நீங்கியிருந்தால் இரண்டாவது மனைவி மூலம் பெற்ற பெண்ணுக்குப் "புனிதவதி" என்ற பெயரை வைத்திருப்பானா? அவரைத் தெய்வமாகக் கருதி காலில் விழுந்து வணங்கியிருப்பானா? பரமதத்தன் அவரை இல்லறத்தில் ஈடுபடுத்தாது, அவரை விட்டு நீங்கியதால்தான். புனிதவதியார் காரைக்காலம்மையார் ஆனார். பதிகங்கள் பாடிப் பரமன் அருளைப் பெற்றார்.

புனிதவதியார் சிவனடியாருக்கு மாம்பழத்தைப் படைத்ததாகக் கூறியபோது பரமதத்தன் சினங்கொள்ளவில்லை. வெறுக்கவுமில்லை. இவ்வாறு இனிச் செய்யாதே என்று எச்சரிக்கவும் இல்லை. இவ்வாறு கருதுவது அர்த்தமில்லாத ஐயத்தின் விளைவே. இருவருக்கும் இடையே மனக்கசப்பு இருந்ததற்கான சான்று இல்லை.

"மனை" என்பதற்கு மனைவி, குடும்பம் என்ற பொருள்களும் உண்டு. பதி என்றால் தலைவன், கணவன் என்ற பொருள்களும் உண்டு. எனவே, "மனைப்பதியாகிய வணிகன்" என்ற தொடருக்குக் குடும்பத்தலைவனாகிய வணிகன் என்ற பொருளைக் கொள்ளாமே, மனை என்றால் வீடு என்று பொருள் கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில் அடுத்த அடியிலேயே "ஓங்கியபேர் இல்எய்தி" என்று வருகிறது. பரமதத்தன் புனிதவதிக்குப் பதியாக இல்ல;ல என்பது தவறு. இருந்தான். ஆனால் அவர் தெய்வத் தன்மையுடையவர் என்பதை அறிந்தபிறகு அவன். அவர் பதியாக இருக்கவிரும்பவில்லை; பக்தனாகக் கருதி காலில் விழுந்து வணங்குகிறான். தெய்வம் என்று கருதியே வணங்குகிறான். தனக்கும், குடும்பத்துக்கும் கேடுசெய்துவிடுவாள் என்று அஞ்சி வணங்கியதாகக் கொள்வது

தவறு. இது வீணான வேண்டாத கற்பனை. பரமதத்தன் புனிதவதிக்கு எந்தக் கொடுமையும் செய்யவில்லை. அப்படிக் கருதுவதும் தவறு. (சேக்கிழார் படைத்த பரமதத்தனைப் படித்துப் பார்த்தால் இது விளங்கும்.

– **ச.மு. விமலானந்தன்**, திருப்புத்தூர்.

மக்கள் சிந்தனை சித்திரை மாத இதழ் மேலட்டையில் அருள்நெறித் தந்தை அவர்களது திருவுருவப்படமும், 13வது குருபூசை தகவலும் அறிந்தோம். கண்களில் கண்ணீர் மல்குகிறது.

அழகப்பா பல்கலைக்கழக 20வது பட்டமளிப்பு உரை அருமை. ராக்பெல்லர், சமச்சீர்கல்வி பற்றிய கருத்துக்கள் மிக அருமை. அறிவு அற்றம் காக்கும் கருவி – விளக்கம் நன்று.

தண்டியடிகள் சிந்தனை – கோமதி சூரியமூர்த்தி அவர்களின் கட்டுரை நன்று.

– காசி ஸ்ரீ V.G. **தெய்வேந்திரன்**, அருப்புக்கோட்டை

தமிழ்ப் பயணம் தொடரும் அடிகளாரின் மும்பை மாநகரப் பயணம் நான்கு நாட்கள் சிறப்பாக அமைந்தது என்பதைக் கண்ணுற்று மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். இலண்டன், சிங்கப்பூர் எனப் பல்வேறு நாடுகளுக்கும் பயணமாகி, "சேரவாரும் செகத்தீரே" என அழைக்கும் பாங்கினை அடிகளார் பெறவேண்டுமென்று மனதார வாழ்த்தி மகிழ்கின்றேன்.

"காரைக்காலம்மையாரும் பரமதத்தனும்" என்ற கட்டுரையில் மேதகு முனைவர் அறவாணன் அவர்களின் கருத்தோட்டம் கண்டேன். பாவலர் மணி பழனி அவர்களின் கட்டுரையை வழிமொழிந்து எழுதப்பெற்ற கட்டுரை மிக அருமை. புனிதவதி சைவக் குடும்பமென்றும் பரமதத்தன் சமணக் குடும்பமென்றும் விரித்து எழுதியுள்ளார்கள். அருமை. இதுதொடர விழைகின்றேன்.

– **நாவுக்கரசன்**, காரைக்குடி.

திருத்தொண்டர் கோ.த. ரெங்கநாதன் மறைவு

சிறந்த காந்தியவாதியும், தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் மாநிலத் தலைமைச் சமயப்பரப்புனருமாகப் பணி செய்தவருமாகிய திருத்தொண்டர் கோ.த. ரெங்கநாதன் அவர்கள் 3.5.2008 அன்று இறைவன் திருவடி சேர்ந்தார். அப்பெருமகனாரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் "மக்கள் சிந்தனை" ஆழ்ந்த இரங்கலைப் புலப்படுத்திக் கொள்கிறது. அப்பெருமகனாரின் நல்லுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்ப அமைதி பெற இறைஞ்சுகிறது.

– **ஆசிரியர்** –





உ

சிவாய நம

பூரி புவனேசுவர் கயா காசி

ஹரித்துவார்

12 நாட்கள் திருப்பயணம்

வேலக்குறிச்சி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சத்திய ஞான மகாதேவ பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் 25.07.2008ம் தேதி புறப்படுகிறது.
அன்பர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 7,502/– முன்தொகை ரூ. 3,002/ – பூரி– புவனேசுவர் – கொனார்க், கயா – புத்த கயா காசி, அலகாபாத் ஹரித்துவார், ரிஷிகேஷ்.

மேலும் விவரங்களுக்கும் முன்பதிவுக்கும்

வேளாக்குறிச்சி ஆதீனம்

திருப்புகலூர், நாகை மாவட்டம்,

போன் : 04366 – 270278 Cell : 94431 – 13025

மனோகர் டிராவல்ஸ்

ஈரோடு – 638 001

போன் : 2269940, 94433 – 80159

கைலாஷ் டிராவல்ஸ்

பெரியமேட், சென்னை – 600 003

போன் : 42053923, 94433 – 80154

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித்தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் “மக்கள் சிந்தனை” மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். “மக்கள் சிந்தனை”யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

- ஆசிரியர்

மக்கள் கல்வி நிலையம்

(மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு)

குன்றக்குடி - 630 206

✆ : 04577 - 264567 Mobile : 94433 64200

குன்றக்குடி மக்கள் கல்வி நிலையம், கிராமம் மற்றும் நகர்ப்புற மக்களுக்கு கீழ்க்கண்ட தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கிவருகிறது. பயிற்சி நிறைவு பெற்றபின் சான்றிதழ்களும், தொழில் துவங்க ஆலோசனைகளும் வழங்கப்படும். சுய உதவிக் குழுக்கள், கிராமப்புற மக்கள், இளைஞர்கள், பெண்கள் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இயக்குநர்,

மக்கள் கல்வி நிலையம், குன்றக்குடி.

பயிற்சிகள் (TRADES)

1. தையல் பயிற்சி 2.கணிப்பொறி பயிற்சி 3. எலக்ட்ரிக்கல் வயரிங் மற்றும் ரிப்பேரிங் 4. மின் அணுக்கருவிகள் பழுதுபார்த்தல் 5.வெல்டிங் பயிற்சி (பற்றவைத்தல்) 6.சீட் மெட்டல் உற்பத்தி 7.பைபர்கிளாஸ் பொருள்கள் உற்பத்தி 8.கட்டிட தொழில்நுட்பம், பொருள்கள் உற்பத்தி 9.இரண்டு நான்கு சக்கர வாகன பராமரிப்பு மற்றும் ரிப்பேரிங் 10.கயிறு மற்றும் பாய் தயாரித்தல் 11. குளிர்சாதனப் பெட்டிகள் ரிப்பேரிங் 12.வார்ப்பு உலோக உற்பத்தி 13.ஹாலோ பிளாக் & மொசைக் கற்கள் தயாரித்தல் 14. சாக்பீஸ், மெழுகுவர்த்தி தயாரித்தல் 15. கம்ப்யூட்டர்சாம்பிராணி, பினாயில் தயாரித்தல் 16. மருத்துவ உதவியாளர் 17.மருத்துவ உபகரணங்கள் பழுதுபார்த்தல் மற்றும் கயாளுதல் 18. திரை அச்சு வேலைகள் 19. வீட்டு உபகரணப் பொருட்கள் பழுதுபார்த்தல் 20.யோகா ஆசிரியர் பயிற்சி 21. ஓவியம் மற்றும் வரைபடம் வரைதல் 22. கைவினைப்பொருட்கள் தயாரித்தல். 23. உணவுப் பொருட்கள் தயாரித்தல் 24. கேஸ் வெல்டிங் 25. தொழில்முனைவோர் மேம்பாட்டுப்பயிற்சி 26. இயற்கை உயிர் உரம் (மண்புழு) தயாரித்தல் 27. வேளாண் சார்ந்த பயிற்சிகள் 28.தோட்டக்கலை சார்ந்த பயிற்சிகள் 29. கால்நடை சார்ந்த பயிற்சிகள் 30. மின்சாதனப்பொருட்கள் பராமரிப்பு

தகுதி	:	தன்முனைப்பு, தன் ஆர்வம் மட்டும்.
பயிற்சி நேரம்	:	பயிற்சி நாள்தோறும் இரண்டு மணி நேரம் மட்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட பயிற்சிகளில் சேரலாம்.
குறிப்பு	:	ஒவ்வொரு பயிற்சிக்கும் பயிற்சி நிறைவு பெற்றபின் தேர்வின் அடிப்படையில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.




அருள்நெறி முழக்கம்

ஆசிரியர் :
தவத்திரு குன்றக்குடி அடிகளார்

விலை : 40/-
பக்கங்கள் : 96பக்கங்கள்

அருள்நெறி பதிப்பகம்
குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்





சமய வாழ்வு

விலை : ரூ. 40/-
பக்கங்கள் : 176 பக்கங்கள்

காற்றில் வந்த கருத்துமழை

விலை : 70/-
பக்கங்கள் : 176 பக்கங்கள்

ஆசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

திருமாறன் பதிப்பகம்
7/8 பீட்டர்ஸ் குடியிருப்பு
இராயப்பேட்டை
சென்னை - 600 014

MAKKAL CHINTHANAI - May 2008 Price Rs. 5-00
Date of Publication 20-05-2008
Register of News Paper for India No. 85913/81 Register No. KKD/04/2006-2008

பெறுநர்
திரு. ஆதீனகர்த்தர் அவர்கள்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்
காரைக்குடி (வழி)

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166